**வாக்குமூலம்**

**நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்**

**அமர்வு வழக்கு எண்:** 68/2024 **நாள்:** 16.03.2026

**அரசு தரப்பு சாட்சி** : 2

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **பிரசாந்த்** | **தாலுக்கா** | : | **கொடைக்கானல்** |
| **தந்தை பெயர்** | **குமாரசாமி** | **தொழில்** | : | தையல் தொழில் |
| **ஊர்** | : **கிளாவரை** | **வயது** | : | 26/2026 |

<u>(1, 3 முதல் 5, எதிரிகள் ஆஜர். 6 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS மனு சமர்ப்பிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது )</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023 ம் ஆண்டு, பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>அரசு தரப்பில் 2 ம் சாட்சியின் முதல் விசாரணை:–</u>

நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து தற்சமயம் தேனியில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்த போன விஜயராஜன் எனது மாமா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். முத்து ராஜ் பிரதீப்பை தெரியும். வழக்கில் 2 வது எதிரியாக இருந்து இறந்த போன அருண் என்பவரை தெரியும். கடந்த 12.04.2023 ஆம் தேதி மாலை சுமார் 02.45 மணியளவில் மலையக்காரர் தென்னந்தோப்பில் நானும் நிஜாத்தும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு எனது மாமா விஜயராஜன் இரு சக்கர வாகனத்தில் வந்தார். நான் என்னவென்று விசாரித்த போது சூரியபிரகாஸிடம் பைக் சம்பந்தமாக கொடுக்கல் வாங்கல் இருந்தது என்று கூறி பேசிவிட்டு வருகிறேன் நீ இங்கேயே இரு என்று சொல்லிவிட்டு சென்றார். நானும் நிஜாத்தும் அங்கேயே இருந்தோம். பின் சத்தம் கேட்டு பார்த்த போது சூரியபிரகாஷ் எனது மாமா விஜயராஜின் தலையில் அரிவாளை கொண்டு வெட்டினார். பின் அங்கிருந்த அருண்குமார் சூரியபிரகாஷிடம் இருந்த அரிவாளை வாங்கி விஜயராஜின் முன் கழுத்தை அறுத்தார். பிரதீப், சசிபிரபு, முத்துராஜ் பிரதீப் ஆகிய 3 பேரும் விஜயராஜை பிடித்து கொண்டார்கள். பின் ரஞ்சித், அருண்குமாரிடம் இருந்து அரிவாளை வாங்கி

விஜயராஜனின் பின் கழுத்து ,கைகள் மற்றும் கை விரல்கள் ஆகியவற்றை வெட்டினார். நானும் நிஜாத்தும் சத்தம் போட்டு கொண்டு அருகில் சென்றோம். எங்களை பார்த்தவுடன் அருண் அரிவாளுடன் தெற்கு பக்கமாக ஓடி விட்டார். தோப்பிலிருந்த watchman –ம் கிடுகு பின்ன வந்தவரும் விஜயராஜனை பார்த்து விட்டு பயந்து ஓடிவிட்டார்கள். நான் அருகில் சென்ற போது மற்ற எதிரிகளும் ஆளுக்கு ஒரு திசையில்ஓடி விட்டார்கள். நான் விஜயராஜனை தூக்கி பார்த்த போது அவருக்கு உயிர் இல்லை. நான் உடனே விஜயராஜனின் அப்பா எனது மாமா பாண்டிக்கு தகவல் சொன்னேன். மற்ற உறவினர்களுக்கும் தகவல் சொன்னேன். ஆட்கள் கூடிவிட்டார்கள். தகவல் தெரிந்து வந்த போலீசார் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் விஜயராஜனின் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். பின் எனது மாமா பாண்டியும் எனது அண்ணன் பிரபாகரனும் காவல் நிலையம் சென்றார்கள். எனது மாமா சொல்ல சொல்ல எனது அண்ணன் புகார் எழுதி கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(வழக்கு சொத்தை குறியீடு செய்யும் பொருட்டு மேற்படி சாட்சியின் முதல் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது)

<u>எதிரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.03.16 18:07:42 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.